

# CHURCH OF THE EPIPHANY
# பிரசன்ன தேவாலயம்

**எழும்பிப்** பிரகாசி; உன் ஒளிவந்தது, **கர்த்தருடைய** மகிமை உன்மேல் உதித்தது.

இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் **கர்த்தர்** உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.

( ஏசாயா 60: 1-2 )

இறைமகன்

இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

பிரசன்ன

தேவாலயத்தின் சார்பில் உங்களை அன்புடன் வரவேற்கின்றேன்

.

சிங்கப்பூர் பேராயத்தின்

ஒரு தனி சிறப்பு வாய்ந்த முதல் தமிழ் குருசேகரமாக

பிரசன்ன தேவாலயம் இருப்பதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். தமிழ். ஆங்கிலம் சீனம் ஆகிய மூன்று மொழிகளில் ஆராதனை

நடைபெறுகிறது. ஜலான் காயு பகுதியில் ஆண்டவரின் அன்பை பரப்பும் கலங்கரை விளக்காக பிரசன்ன தேவாலயம் எழும்பி பிரகாசிக்கின்றது

.

திருச்சபை என்பது கர்த்தரால் அருளப்பட்ட குடும்பம், கிறிஸ்துவின் மணவாட்டி என்பதை உணர்ந்து ஆண்டவருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து சேவை செய்வதிலும், சாட்சி பகிர்தலிலும் ,ஆத்தும ஆதாய சபையாகவும் , கர்த்தரை உண்மையாக வழிபட்டு அவரையே பற்றி கொள்ளும் சபையாகவும் பிரசன்ன தேவாலயம் திகழ்கின்றது.

பிரதான கட்டளை மத்தேயு 28: 18-20

அருட்செய்தி பணிக்கான சவால், சீடத்துவ சவால் ,அருட்பணிக்கான சவால் , இவைகளை கைக்கொண்டு கர்த்தரின் பணியை உண்மையோடு நிறைவேற்றுவோம்.

சிலுவை சிலுவை என்றே நாவசையும்

இந்த பிரசன்ன தேவாலயம் இயேசு தொண்டு நாளும் செய்யும்

ஷாலோம்

ஆண்டவரின் அருட்பணியில்

அருட்திரு எடிசன் W வில்சன்

தலைமை ஆயர் (பொறுப்பு )

பிரசன்ன தேவாலயம் .

சிங்கப்பூர் பேராயம்